# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

## மாநில தகவல் ஆணையர்

*****

### வழக்கு எண். CP 4079/SCIC/2025

Thiru N. JAYA PRAKASH - புகார்தாரர்
No.30, Kumilamparappu Road
CHITHODE, ERODE-638 102
Phone:96261 40007.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
உடுமலைப்பேட்டை சார்பதிவகம்
திருப்பூர் மாவட்டம் - 642 126.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **16.07.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.07.2025 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 26.08.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 16/07/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், உடுமலைப்பேட்டை சார்பதிவகம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "Details of property : SF No.s.264/A1B1, 267/A2 Part 275, 276/2A Part 2662C, 277/1 Part, 277/3, 287, 289 Part, 290/1, 290/3, 291/1. 291/2 in Manupatty Village, Udumalpet Taluk - regarding - particulars of registration, sale deeds, and GPAs done in the above mentioned SF Numbers in the years 2023, 2024 and 2025 (upto the current date)" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.N.ஜெயப்பிரகாஷ் அவர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.ப.சிவக்குமார், சார்பதிவாளர், உடுமலைப்பேட்டை சார்பதிவகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

**ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான 16/07/2024 நாளிட்ட மனுவிற்கு அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் எவ்வித தகவல்களும் அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, அப்போதைய (16/07/2024 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு.K.சிவக்குமார், (தற்போது சார்பதிவாளர், நம்பியூர், கோபிசெட்டிப்பாளையம் சார்பதிவகம், ஈரோடு மாவட்டம்) அவர்கள் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்சொன்ன அலுவலரிடமிருந்து காரண விளக்க கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தைப் பெற்று அதனை 15/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

3. பொதுத் தகவல் அலுவலர், 30/07/2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் மற்றும் தொடர்பான ஆவணங்களின் நகல்களையும் இணைத்து அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனக்கு மேற்சொன்ன தகவல்கள் தனக்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 30/07/2026 தேதியிட்டு தகவல்களை அனுப்பியதற்கான சான்றினை ஆணையத்தின் முன் காண்பித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. எனவே, மனுதாரர், மேற்சொன்ன தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன், ஏதேனும் ஆட்சேபனை இருப்பின், தனது ஆட்சேபனையினை இனவாரியாக 31/08/2026-க்குள் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு மனுதாரரிடமிருந்து ஆட்சேபனை மனு கிடைக்கப் பெற்றவுடன், அம்மனுவின் அடிப்படையில் ஆவணங்களின்படியான, சரியான தகவல்களை 15/09/2026-க்குள் மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை 15/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரரின் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான 26/07/2025 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு அப்போதைய (26/07/2025 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர் திரு.ஜெயப்பிரகாஷ் (தற்போது உதவி பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் தெற்கு மாவட்டம்) எவ்வித பதிலும் அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களை எச்சரிக்கிறது. இனிவருங்காலங்களில், மனுதாரர்களிடமிருந்து வரப் பெறும் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு உரிய கால வரையறைக்குள் தகவல்களை அளிக்காத பட்சத்தில்,** அச்சட்டத்தின்படியான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். CP 4079/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1.பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
உடுமலைப்பேட்டை சார்பதிவகம்
திருப்பூர் மாவட்டம் - 642 126.

2.திரு.K.சிவக்குமார்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது சார்பதிவாளர்,
நம்பியூர் சார்பதிவகம், கோபி,
ஈரோடு மாவட்டம்)

3.திரு.ஜெயப்பிரகாஷ்
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
(தற்போது உதவி பதிவுத்துறைத் தலைவர்,
கோயம்புத்தூர் தெற்கு மாவட்டம்)

**புகார்தாரர்**

Thiru N. JAYA PRAKASH
No.30, Kumilamparappu Road
CHITHODE, ERODE-638 102
Phone:96261 40007.

நகல்
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
100, சாந்தோம் நெடுஞ்சாலை
பட்டினப்பாக்கம், சென்னை-600 028,

2.பதிவாளர், தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை-600 035.

RG/Sr.PC